

# நெல்லை: 'திடீர்' பதட்டம்
# போலீஸ் குவிப்பு



# தாழையூத்து பஞ். விவகாரம்
## நெல்லை கலெக்டர் ஆபீசில் இருதரப்பினர் முற்றுகை
# போலீசாருடன் தள்ளுமுள்ளு

தினமலர்

◆ தென்காசி ◆ செவ்வாய் ◆ ஆகஸ்ட் 17 ◆ 2010

கல்யாண
பட்டு ஜவுளிகளுக்கு
ஹாஜி முஸ்தபா
பட்டு ஜவுளி மாளிகை & தங்க மாளிகை
தென்காசி Ph: 222371
B10081701





நெல்லை கலெக்டர் அலுவலகத்தில் தாழையூத்து பஞ்., தலைவி கிருஷ்ணவேணிக்கு ஆதரவாக மனு கொடுக்க வந்த ஆதித்தமிழர் பேரவையினர். (அடுத்த படம்) துணைத் தலைவர் மீரான்கனிக்கு ஆதரவாக மனு கொடுக்க வந்த ஊர் பொதுமக்கள்.

# தாழையூத்து பஞ்., தலைவர் விவகாரம் விஸ்வரூபம்
# இரு தரப்பினர் மனு கொடுக்க வந்ததால் பரபரப்பு

திருநெல்வேலி, ஆக. 17-

தாழையூத்து பஞ்., தலைவர் விவகாரம் விஸ்வரூபம் எடுத்துள்ளது. தலைவருக்கு ஆதரவாகவும், துணைத்தலைவருக்கு ஆதரவாகவும் ஒரே நேரத்தில் கலெக்டர் அலுவலகத்திற்கு மனு கொடுக்க வந்ததால் பரபரப்பு ஏற்பட்டது.

சுதந்திர தினத்தையொட்டி நெல்லை மாவட்டத்தில் உள்ள பஞ்.,களில் கிராம சபைக்கூட்டம் நடந்தது. தாழையூத்தில் நடந்த கிராம சபைக்கூட்டத்தில் பஞ்., தலைவர் கிருஷ்ணவேணியை துணைத்தலைவர் மீரான்கனி தாக்கியதாக போலீசில் புகார் செய்யப்பட்டது. மேலும் நெல்லை அரசு ஆஸ்பத்திரியிலும் சிகிச்சை பெற்றார்.

இந்நிலையில் நெல்லை கலெக்டர் அலுவலகத்தில் நேற்று நடந்த மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் கிருஷ்ணவேணிக்கு ஆதரவாக ஆதித்தமிழர் பேரவையும், மீரான் கனிக்கு ஆதரவாக ஊர் பொதுமக்களும் மனு கொடுக்க வந்தனர்.

ஆதித்தமிழர் பேரவையின் மாவட்ட செயலாளர் கதிரவன் தலைமையில் வந்த மக்கள் போலீசாரை கண்டித்தும், மீரான் கனியை கண்டித்தும் கோஷமிட்டவாறு கலெக்டரிம் மனு கொடுக்க சென்றனர். அவர்களை போலீசார் தடுத்து நிறுத்தினர். இதனால் மனு கொடுக்க வந்தவர்களுக்கும், போலீசாருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது. தொடர்ந்து போலீசார் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினர்.

இதற்கிடையே துணைத்தலைவர் மீரான்கனிக்கு ஆதரவாக வந்த பொதுமக்கள் தாழையூத்து பஞ்.,சை கலைக்க வேண்டும் என கோஷங்கள் எழுப்பினர். இதனால் கலெக்டர் அலுவலகத்தில் பரபரப்பு ஏற்பட்டது. தொடர்ந்து அங்கு அதிரடிப்படை போலீசார் குவிக்கப்பட்டனர்.

தாழையூத்து பஞ்., தலைவர் கிருஷ்ணவேணிக்கு ஆதரவாக வந்தவர்களையும், மீரான்கனிக்கு ஆதரவாக வந்தவர்களையும் டி.ஆர்.ஓ., ரமண சரஸ்வதியை தனித்தனியாக சந்திக்க போலீசார் அனுமதித்தனர்.

ஆதித்தமிழர் பேரவை சார்பில் கொடுக்கப்பட்ட மனுவில், ''தாழ்த்தப்பட்ட சமூகத்தை சேர்ந்த தாழையூத்து பஞ்., தலைவர் கிருஷ்ணவேணிக்கு நெருக்கடி கொடுக்கப்படுகிறது. அவரை துணைத்தலைவர் மீரான்கனி தாக்கியுள்ளார். மீரான் கனி மற்றும் அவரது ஆதரவாளர்களை வன்கொடுமை சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்ய வேண்டும்'' என குறிப்பிடப்பட்டுள்ளது.

அனைத்து சமுதாய மக்கள் கொடுத்த மனுவில், ''தாழையூத்து பஞ்.,சில் மக்கள் குறைகள் குறித்து மனு கொடுத்தால் அலட்சியப்படுத்தப்படுகிறது. வன்கொடுமை சட்டத்தின் கீழ் வழக்குப் போடுவதாக தலைவர் மிரட்டுகிறார். எனவே தாழையூத்து பஞ்.,சை கலைக்க வேண்டும்'' என குறிப்பிட்ப்பட்டிருந்தது.

இருதரப்பினர் கொடுத்த மனுவை பெற்றுக் கொண்ட டிஆர்ஓ., ரமணசரஸ்வதி உரிய நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார். நெல்லை கலெக்டர் அலுவலகத்தில் தாழையூத்து பஞ்., தலைவர் விவகாரம் தொடர்பாக இருதரப்பினர் ஒரே நேரத்தில் மனு கொடுக்க வந்ததால் பரபரப்பு ஏற்பட்டது.

# ஊராட்சித் தலைவி மீது தாக்குதல்: இரு தரப்பினரும் வருவாய் அலுவலரிடம் மனு



திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் திங்கள்கிழமை நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மனு கொடுக்க வந்திருந்த தாழையூத்து பகுதி மக்கள்.



மனு கொடுக்க வந்திருந்த ஆதித்தமிழர் பேரவையினர்.

திருநெல்வேலி, ஆக. 16: திருநெல்வேலி அருகே தாழையூத்து ஊராட்சித் தலைவியை துணைத் தலைவர் தாக்கியதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாக இரு தரப்பின் ஆதரவாளர்களும் மாவட்ட வருவாய் அலுவலரிடம் திங்கள்கிழமை மனு அளித்தனர்.

தாழையூத்து ஊராட்சி மன்றத்தில் ஞாயிற்றுக்கிழமை கிராம சபைக் கூட்டம் நடைபெற்றது. அப்போது, ஊராட்சித் தலைவி கிருஷ்ணவேணிக்கும், துணைத் தலைவர் மீரான்கனிக்கும் இடையே நடந்த வாக்குவாதத்தின்போது, துணைத் தலைவர் தன்னை தாக்கியதாகக் கூறி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சேர்ந்தார் கிருஷ்ணவேணி.

இந்நிலையில், திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் திங்கள்கிழமை நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்திற்கு கிருஷ்ணவேணியின் ஆதரவாளர்களான ஆதித்தமிழர் பேரவையினரும், மீரான்கனியின் ஆதரவாளர்களான தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாத் மற்றும் அவரது சமுதாயத்தைச் சேர்ந்தவர்களும் திரளாக வந்திருந்தனர்.

ஆதித்தமிழர் பேரவையின் சார்பில் மாவட்ட செயலர் மு. கதிரவன் மாவட்ட வருவாய் அலுவலர் பெ. ரமண சரஸ்வதியிடம் அளித்த மனுவில், கிருஷ்ணவேணியை தாக்கிய மீரான்கனியை உடனடியாக வன்கொடுமை தடுப்புச் சட்டத்தில் கைது செய்ய வேண்டும் என கோரியுள்ளார்.

இதேபோல், மீரான்கனியின் ஆதரவாளர்கள் அளித்துள்ள மனு விவரம்:

தாழையூத்து ஊராட்சியில் எந்தவிதமான வளர்ச்சிப் பணிகளும் நடைபெறவில்லை. குறைகளைத் தெரிவிக்க செல்லும் பொது மக்களிடம் உங்கள் மீது என்னை சாதியைச் சொல்லி திட்டியதாக புகார் கொடுப்பேன் என ஊராட்சித் தலைவி கூறி மிரட்டி வருகிறார்.

துணைத் தலைவர் மீது ஏற்கெனவே இதுபோல் புகார் கொடுத்து வழக்குப்பதிவு செய்யப்பட்டு அது நிலுவையில் உள்ளது. எனவே, மாவட்ட ஆட்சியர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றனர்.

இரு தரப்பினரும் ஒரே நேரத்தில் ஆட்சியர் அலுவலகம் வந்து மனுக் கொடுத்ததால் அங்கு சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

# நெல்லை மாலை முரசு

Regd. No.TN/TVL-014/2009-2011
RNI. No. 1487/59
★★★

8 பக்கம்
விலை 300 காசு

முரசு : 52 ஒலி : 36 MALAI MURASU

16-8-2010 விக்ருதி ஆண்டு
ஆடி 31-ந்தேதி திங்கட்கிழமை


கிராம சபை கூட்டத்தில் தாக்குதல்

## தாழையூத்து பஞ். தலைவி ஆஸ்பத்திரியில் அனுமதி

### துணைத்தலைவர் மீது வழக்கு

நெல்லை, ஆக. 16: தாழையூத்து ஊராட்சி தலைவி கிருஷ்ணவேணி காயத்துடன் நெல்லை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். கிராம சபை கூட்டத்தில் அவரை தாக்கியதாக துணைத்தலைவர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.



பஞ். தலைவி
கிருஷ்ணவேணி

நெல்லை அருகே உள்ள தாழையூத்தை சேர்ந்தவர் பொய்யாமணி. இவரது மனைவி கிருஷ்ணவேணி தாழையூத்து ஊராட்சி தலைவராக உள்ளார். கடந்த 2 ஆண்டுகளாக தன்னை நாற்காலியில் அமர்ந்து பணி செய்யவிடாமல் தடுப்பதாக ஊராட்சி துணைத்தலைவர் மீரான்கனி மீது கிருஷ்ணவேணி குற்றம் சாட்டினார். இது குறித்து கலெக்டர் விசாரணையும் நடந்தது.

இந்நிலையில் சுதந்திர தினத்தை முன்னிட்டு நேற்று ஊராட்சி அலுவலக வளாகத்தில் கிராம சபை கூட்டம் நடந்தது. இதில் கலந்து கொண்ட தன்னை துணைத் தலைவர் மீரான்கனி கையை திருகி தாக்கியதாக கிருஷ்ணவேணி கூறினார்.

இது குறித்து தனது பகுதி மக்களுடன் சேர்ந்து சென்று தாழையூத்து போலீசில் புகார் செய்தார். அத்துடன் நெல்லை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையிலும் சேர்ந்தார். அவரது புகாரின் அடிப்படையில் தாழையூத்து போலீசார் துணைத்தலைவர் மீரான்கனி மீது வழக்குப்பதிவு செய்தனர்.

urugan, on beh

## கலெக்டர் அலுவலகத்தில் பதட்டம்



மேல தாழையூத்து ஊராட்சி தலைவி கிருஷ்ணவேணியை துணை தலைவர் தாக்கியதாக கூறி ஆதித்தமிழர் பேரவையினர் இன்று கலெக்டரிடம் புகார் மனு கொடுக்க வந்தனர். துணை தலைவர் மீரான் மீது பொய் புகார் கொடுப்பதாக கூறி மற்றொரு தரப்பினரும் அங்கு திரண்டதால் பரபரப்பு ஏற்பட்டது. இதை தொடர்ந்து இரு தரப்பினரும் கலெக்டர் அலுவலகத்தில் அமர்ந்து தர்ணா செய்வதை படத்தில் காணலாம்.



ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களை போலீசார் சமாதானம் செய்த காட்சி.

### தாழையூத்து பஞ்சாயத்து தலைவி மீது தாக்குதல்:

# நெல்லை கலெக்டர் அலுவலகத்தில் இரு தரப்பினர் திரண்டதால் பரபரப்பு

## அதிரடிபடை போலீஸ் குவிப்பு

நெல்லை, ஆக.16–

நெல்லை தாழையூத்து பஞ்சாயத்து கிராம சபை கூட்டம் நேற்று நடந்தது. அப்போது பஞ்சாயத்து தலைவி கிருஷ்ணவேணியை துணை தலைவர் மீரான்கனி தாக்கியதாக கூறப்படுகிறது. இது குறித்து கிருஷ்ணவேணி தாழையூத்து போலீசில் புகார் செய்தார். போலீசார் மீரான்கனி மீது வழக்கு பதிவு செய்தனர். இந்தநிலையில் இன்று காலை கிருஷ்ணவேணியை தாக்கியவர்கள் மீது நடவடிக்கை எடுக்க கோரி ஆதி தமிழர் பேரவையினர் மாவட்ட செயலாளர் கதிரவன் தலைமையில் நெல்லை கலெக்டர் அலுவலகத்துக்கு திரண்டு வந்தனர். மற்றொரு தரப்பு சார்பில் தவ்ஹீத் ஜமாத் அமைப்பினர், முஸ்லிம் முன்னேற்ற கழகத்தினர் கலெக்டரிடம் மனு கொடுக்க வந்தனர். இரு தரப்பினரும் ஒரே நேரத்தில் மனு கொடுக்க வந்ததால் கலெக்டர் அலுவலகத்தில் பரபரப்பு ஏற்பட்டது. திடீரென இரு தரப்பினருக்கும் இடையே மோதல் ஏற்படும் சூழ்நிலை உருவானது. இதையடுத்து கலெக்டர் அலுவலகத்தில் அதிரடிபடை போலீசார் குவிக்கப்பட்டனர் பின்னர் இரு தரப்பை சேர்ந்த சிலர் மட்டும் கலெக்டர் அலுவலகத்திற்குள் அனுமதிக்கப்பட்டு, மனுக்கள் பெறப்பட்டன.

# தங்கை உடலு

நெல்லை, ஆக. 16–

நெல்லை டவுன் அம்மன் சன்னதி தெருவை சேர்ந்தவர் சங்கரலிங்கம் (வயது 80) இவரது தங்கை பொன்னம்மாள் (65). இவர்கள் இருவருக்கும் திருமணமாகவில்லை. இருவரும் ஒரே வீட்டில் வசித்து வந்தனர்.

ஓய்வு பெற்ற தபால் ஊழியரான சங்கரலிங்கத்திற்கு மனநிலை பாதித்திருந்ததாக கூறப் படுகிறது. இந்நிலையில் அவரது தங்கை